**இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் -கட்டம்- 02, பிரிவு 01 - 2021**

இரத்மலானை / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் -கட்டம்- 02, பிரிவு 01 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2019 பெப்ரவரி 18 ஆந் திகதிய சீஎல்கே 1023 - 01 எல் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(ஜே) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. இரத்மலானை குடியிருக்காளர்களிற்கும் (95,000 குடியிருப்பாளர்) மற்றும் மொறட்டுவவிலுள்ள குடியிருப்பாளருக்கும் (167,000 குடியிருப்பாளர்) கழிவகறறல் சேவைக்கான நுழைவினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளகவுள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 21,682.36 மில்லியனிற்கு சமமான யூரோ 105.5 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 15,414.00 மில்லியனிற்கு சமமான யூரோ 75 மில்லியன் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 6,268.36 மில்லியனிற்கு சமமான யூரோ 30.5 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கபட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2024 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. பௌதீக செயலாற்றல்

2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| | நடவடிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்டது | உள்ளபடியானது | | |
| (அ) | புதிய இறைக்கும் இல்லம், இருக்கின்ற இறைக்கும் இல்லத்தை சீர்படுத்தல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி என்பவற்றின் நிர்மாணம். | ஒப்பந்தத்தின் நிதி மதிப்பாய்வு 2021 திசெம்பர் இறுதியில் செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. | நிதி மதிப்பாய்வு 2022 மே 15 வரையும் செய்யப் பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப ஆவண மதிப்பாய்வு அறிக்கை SCAPC அனுமதிக்காக 2022 ஏப்ரல் மாதத்தில் நீர் வழங்கல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போதைய அரசியல் ஸ்திரனின்மையால் SCAPC மீள்நியமணம் செய்யப்பட வேண்டியிருந்தது. | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிர்மாணம் மற்றும் ஆலோசனை மேற்பார்வை | ஒப்பந்தமானது 2021 இன் 4 ஆவது காலாண்டில் வழங்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது. | ஒப்பந்தமானது 2022 மே 15 வரையும் வழங்கப் பட்டிருக்கவில்லை. | கோவிட் நோய் தொற்று மற்றும் AFD இன் ஆழ்ந்த பரிந்துரைகளை சேர்த்த பின்னர் REF இற்காக அவர்களுடைய அனுசரணை பெறுதல் என்பவற்றில் தாமதத்தால் நிர்மாணம் இன்னமும் தொடங்கப்படவில்லை. இது முன்னேற்றத்தை பாதிக்கவில்லை என குறிப்பிடப்பட்டது. | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) வீட்டு இணைப்புகள் | ஒப்பந்தத்தின் கேள்வி கோரல் ஆவணங்கள் 2021 இன் இரண்டாவது காலாண்டு அளவில் தயாரிக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. | ஒப்பந்தத்தின் கேள்வி கோரல் ஆவணங்கள் 2022 மே 15 வரையும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | வீட்டு இணைப்பு நடவடிக்கைகள் வழங்கல் தொடங்க முன்னர் வலையமைப்பு மற்றும் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. கேள்வி கோரல் ஆவணங்கள் தயாரிக்க முடியும் அதேநேரம் நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் இருந்தன. ஆகவே, செயற்திட்டத்தின் குறிக்கோளிற்கு பாதிப்பு இருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தம் நிர்மாண ஒப்பந்தம் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய போதிலும் இது 2022 மே 15 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது குழாய்கள் குழாயிடல் ஒப்பந்தத்தின் கீழ் தொழிலாரம்பிப்பு வேலைகள் மற்றும் வேலைத்தள புலனாய்வு வேலைகள் செயற்பாட்டில் உள்ளது. இடைக்கால நிர்மாண நடவடிக்கைகளின் போது மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தம் அவசரமாக தேவைப்பட்டது. ஆகவே, ஆலோசனை ஒப்பந்தம் வழங்கலிலுள்ள தாமதம் இந்த ஒப்பந்தத்தின் முன்னேற்றத்தை பாதித்திருக்கவில்லை. | ஆலோசனை ஒப்பந்தம் வழங்கலை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டமானது கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 02 ஆண்டுகள் கடந்த பின்னரும் கடனின் கீழான நிதிகளை பயன்படுத்தியிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. ஆகவே, கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்கு எதிராக கடனளிக்கும் முகவரால் 2021 திசெம்பர் 31 வரை ரூபா 205.09 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | இறைக்கும் இல்லங்களிற்கான தெரிவு செய்யப்பட்ட சிறந்த தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிதி ரீதியான சாத்திய தன்மையான காணிகளிற்கு எதிரான பொது மக்கள் எதிர்ப்புக் காரணமாக அவை பல சந்தர்ப்பங்களில் மாற்றத்திற்கு உட்பட்டிருந்தது. ஏனென்றால், இந்த காரணம் வடிவமைப்பு அளவீட்டு பட்டியல் அளவுகள் மற்றும் படம் வரைதல் வடிவமைப்பு என்பவற்றினை திருத்துவதற்கும் உட்பட்டிருந்தது. இதன்படி, வடிவமைப்பு மற்றும் கேள்வி கோரல் ஆவணங்களின் இறுதியாக்கல் கொள்வனவு வேலைகள் என்பன தொடங்கப்பட்டது. அந்த தாமதங்கள் செயற்திட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டினை பின்தள்ளியிருந்தது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால- மைப்புச் சபையானது தாமதமில்லாமல் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவகணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு அவர்களுடைய விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால் இன்னமும் அறிக்கையை விடுவித்திருக்காததுடன் அண்மையில் அவர்களுடைய அறிகையை விடுவிப்பதற்கு அவர்கள் பொறுப்பேற்றிருந்தனர். | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன் அந்த ஆண்டிற்காக ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |